உ

சிவமயம்

# களவு நூல்

## உரையுடன்

சரசோதிமாலையின்கணுள்ளது

கொக்குவில்

இ. சி. இரகுநாதையரால்

சோதிடப்பிரகாசயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

நான்காம் பதிப்பு.

வியய ஆவணிமீ.

1946.

(Copy Right Reserved)

விலை சதம் 18.

உ

சிவமயம்

# கனவு நூல்

### விநாயகவணக்கம்

பூமேவுமாதுதினமும்புணர்பொற்பமைந்த
மாமேகவண்ணன்மருகோன்மதமாமுகத்தோன்
பாமேவுசெஞ்சொற்புலவோர்கள்பரவியேத்துந்
தேமேவுசெந்தாமரைத்தாளிணைசென்னிசேர்ப்பாம்.

---

பானுமதிதேவர்மலைவேலைநதிகூபம்
பைப்பொன்மணிதந்தைமகவன்னைநரர்மாத
ரானைபரிதேரெருதுகோயின்மறையோர்க
ளப்புயமிறைச்சிகனிபூமரமொடன்ன
மானினொடுகோழிமதுசோரிமலர்நீறு
பன்னுகடைமோரொடுபருத்தியும்விடத்தா
னேனையுளவெள்ளைசவமாநிரைகடீப
மென்னுமிவைகாணினிதென்பர்கனவென்றே.

(இ-ள்:) சூரியன், சந்திரன், தேவர், மலை, கடல், நதி, கிணறு, பொன், இரத்தினம், பிதா, பிள்ளை, மாதா, மனிதர், மகளிர், யானை, குதிரை, தேர், எருது, கோயில், பிராமணர், தாமரைப்பூ, இறைச்சி, பழம், பூமரம், அன்னம், மான், கோழி, கள்ளு, இரத்தம், பூ, விபூதி, மோரும் பருத்தியுமல்லாத வெள்ளைப்பொருள், சவம், பசுக்கள், விளக்கு என்னுமிவைகளைக் கனவிற் காண்பது நல்லதென்பர். எ-று. (௧)

வேறு

செங்கதிர்மண்டலந்திங்கண்மண்டலம்
பங்கயக்கரத்திறைற்பற்றிக்கொள்வதாக்
கங்குலிற்பகலினிற்கனவிற்காணுமே
லங்கண்மாஞாலமெண்ணரசனுவனே.

(இ - ள்): ஒருவன் சூரியமண்டலத்தையாவது சந்திரமண்டலத்தையாவது தன்கையாற் பிடித்துக் கொள்வதாக இராவிலேனும் பகலிலேனும் கனக்காண்பானயின் அவன் அரசனுவான். எ - று. (உ)

மன்னியவலப்புயமலையைவெள்ளையாம்
பன்னகந்தீண்டினும்பகர்கனவிலே
தன்னுடைச்சென்னிதான்றடிந்துதின்னினு
மன்னவனேத்துசீர்மன்னனுவனே.

(இ - ள்): ஒருவன் தன்னுடைய வலப்புயத்தை வெள்ளைப்பாம்பு தீண்டவும், தன்தலையைத் தான் அரிந்து தின்னவும் கனக்காண்பானயின் அவன் அரசனுவான். எ - று. (௩)

சுரபியுமமரரும்வெற்புஞ்சோலையு
மிரவியுந்திங்களுமேமறுவேழமும்
புரவியுமாதரும்பொன்னுந்தீபமுந்
திருவுறுங்கனவினிற்சிறந்துகாணவே.

(இ - ள்): பசு, தேவர், மலை, சோலை, சூரியன், சந்திரன், மதயானை, குதிரை, பெண்கள், பொன், விளக்கு என்னுமிவைகளைக் கனவிற்கண்டால் செல்வம் வந்துசேரும். எ - று. (௪)

வெண்டொடைவெண்டுகில்விளங்குமேனியா
ளொண்டொடிதன்னகத்துட்புகுந்திட
வெண்டகுதன்மனையெரிந்துதோன்றிடக்
கண்டிடின்வாழ்வுறுங்கனவிலென்பரே.

(இ - ள்): ஒருபெண் வெண்பூமாலையும் வெள்ளைப்பட்டும் விளங்குஞ் சரீரத்தோடு தன்வீட்டிற் புகவும் தன் வீடு எரிந்துதோன்றவும் ஒருவன் கனவிற்காண்பானயின் அவனுக்கு நல்வாழ்வு பொருந்தும். எ - று.

வேறு

சங்குதீபநிறைகுடஞ்சாமரை
பங்கசாதப்பலமணிவெண்குடை
கங்கைவேலைகனவினிற்கண்டிடிற்
பொங்குசெல்வம்புகழ்படவெய்துமே.

(இ - ள்): சங்கு, விளக்கு, நிறைகுடம், சாமரை, தாமரைப்பூ, இரத்தினம், வெண்குடை, கங்கை, கடல் என்னும் இவைகளைக் கனவிற் கண்டால் நிறைந்த செல்வம் வந்து சேரும். எ - று. (௬)

வேறு

சுரராடலோடல்கருநாகநீசர்
துணைவியுமாதர்மறவோர்
கருநாய்குரங்குநரிபேயரக்கர்
கழுகோடுகாகமிவையும்
வருவாசிதேனுமதயானைதேவர்
மறையோரகற்றிமொழியுங்
கரிதானயாவுமிகமேகனவி
னிடைகாணநன்மையிலையே.

(இ - ள்): தேவர்கள் ஆடுதல் ஓடுதல், கரும் பாம்பு, புலையர், அமங்கலிகள், வேடர், கருநாய், குரங்கு, நரி, பேய், இராக்கதர், கழுகு, காகம் என்பவைகளையும், குதிரை பசு மதயானை தேவர் மறையோரல்லாத கரிய பொருள்களையும் கனவிற் கண்டால் நன்மை இல்லை. எ - று. (௭)

வேறு

ஓடிடல்சிரித்திடலும்பரானவ
ராடிடலழுதிடலங்கைகொட்டிட
னீடியகனவினினிசழ்ந்துதோன்றுமேற்
கேடுவந்துலகினிற்கிளருமென்பவே.

(இ - ள்): தேவர்கள் ஓடுதல், சிரித்தல், நடித்தல், அழுதல், கைகொட்டல் என்னும் இவைகளைச் செய்யக்கண்டால் உலகத்திற் கேடுவருமென்பர். எ - று. (௮)

கனவிலோர்பாத்திரங்கன்னியேந்திய
நினைவரும்விசும்பினின்றுவீழினும்
பனிமதிபரிதியைப்பணிகண்டினும்
வனிதையேமன்னவர்மரணமாவரே.

(இ - ள்): ஒருபெண் பாத்திரத்தை எந்திக்கொண்டு ஆகாயத்தினின்றுங் கீழிறங்கக்கண்டாலும், சூரிய சந்திர கிரகணங்களைக் கண்டாலும் அரசர் மரணமாவார். எ - று. (௯)

காகமுமுவணமுங்கழுகுங்கார்நிற
நாகமுங்கழுதையுநரியும்பன்றியு
மூகமுங்கனவினிலுறக்காண்பரேற்
சோகமும்வறுமையுந்துயருமெய்துமே.

(இ - ள்): காகம், கருடன், கழுகு, கரும்பாம்பு, கழுதை, நரி, பன்றி, குரங்கு என்னும் இவைகளைக் கனவிற்காண்பரேல், சோகம், வறுமை, துயர் என்னும் இவைகளடையும். எ - று. (௧௦)

தென்றிசைவருபவளொருத்திசெம்மலர்
துன்றியயாக்கையைத்தொடர்ந்துசென்றிடக்
கன்றியசிந்தையாற்கனவிற்காண்பரேன்
மன்றலங்குழலினாய்மரணமாவரே.

(இ - ள்): செம்பூச்சூடி, தெற்குத்திக்கினின்றும் வருகின்ற ஒருபெண் பற்றிச்செல்லக் கனவில் ஒருவர் காணின் அவர் மரணமாவர். எ - று. (௧௧

ஒண்கதிரம்புலியுடுக்கள்கோபுரம்
வண்கொடிமேருமாமலைகள்வீழ்ந்திடக்
கண்கெடமுடிவிழக்கனவிற்காண்பரேன்
மண்கெடத்தக்கவர்மரணமாவரே.

(இ - ள்): சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், கோபுரம், கொடி, மேருமலை என்பவைகள் விழவும் கண்கெடவும், முடிவிழவும் கனவிற்கண்டால் பெரியோர் மரணமாவர். எ - று. (௧௨)

வேறு

நீறுமோரும்பருத்தியுநீணதிச்
சேறுமென்புமிறகுசெம்பூக்களுங்
காறிலாதகனவிடைக்கண்டிடிற்
கூறுநோயும்வறுமையுங்கூடுமே.

(இ - ள்): நீறு, மோர், பருத்தி, நதிச்சேறு, எலும்பு, இறகு, செம்பூ என்பவற்றைக் கனவிற் கண்டால் நோயும், வறுமையும் உண்டாகும். எ - று. (கங.)

வேறு

வங்சமதிலேறிநடுக்கடலிற்போக
மன்னுகரையதிற்சேரக்குடைவாளாதி
தங்கியவாயுதமிறைச்சிசாலியுப்புத்
தயிர்பால்நெய்மிதியடிதண்கனிதாடாங்கும்
பொங்கமுறுசெருப்பிவைகள்காணப்பூணப்
புசித்திடமெய்க்கனவினிடைவருமேயாயி
னங்கமுறுபிணிதீர்ந்துசுகமுண்டாகி
யருட்பொருளும்வருமெனவேயறைந்திடாயே.

(இ - ள்): மரக்கலத்திலேறி நடுக்கடலிற் போகவும், கரையிற் சேரவும்; குடை, வாள் முதலிய ஆயுதம், மிதியடி, செருப்பு இவைகளைப் பூணவும்; இறைச்சி, நெல், உப்பு, தயிர், பால், நெய், கனி என்னும் இவைகளைப் புசிக்கவும் கனவில் வருமாயின் நோய்நீங்கிச் சுகமுண்டாகிப் பொருளும் வரும். எ - று. (கச)

கள்ளுதிரமறையவர்களருந்தத்திய
கட்டமதைச்சுட்டுமெய்யிற்பூசவன்னம்
புள்ளரசோடன்றில்கொக்குமயூரங்காணப்
பொற்சிவிகைமுதலானயானமேற
வெள்ளரியகையிணையைச்சட்டக்காலில்
விலங்கிடநற்கன்னியரைக்கூடமாந்தர்
தெள்ளுதமிழ்பாடியும்பர்பூசைசெய்யத்
திகழ்கனவுவரிற்பலன்கள்சேருமன்றே.

(இ - ள்): பிராமணன் கள்ளும் இரத்தமுமுண்ணவும், மலஞ்சுட்டுச் சரீரத்திற்பூசவும் கண்டாலும்,

அன்னம், கருடன், அன்றில், கொக்கு, மயில் என்பவைகளைக் கண்டாலும், சிவிகை முதலிய வாகனமேறவும், கையிரண்டையுங் கட்டவும், கால்களிலே விலங்கிடவும், கன்னியரைக்கூடவும், தேவபூசைசெய்யவும் கண்டாலும் பலன்கள் வரும். எ - று. (க[illegible])

செருக்கானமழைவரவேபுதியகூறை
சேர்த்துநதிநீந்திடமெய்ப்பிணிகடரு
மருக்காலுங்குழல்வனிதைதன்னைக்காண
மனுடர்தசைபொன்னிறமாச்சுட்டுமாந்தத்
திருக்காலுங்காலருந்தநூறைஞ்ஞூறு
செழுந்தனமாம்புயநூறுபத்தாஞ்சென்னி
விருப்பாரத்தின்பமிரணில்வேந்தராவார்
வியாழனுரைத்திடுகனவின்விதியதன்றே.

(இ - ள்): மழைவரவும், கோடியுடுத்து நதியிலே நீந்தவுங் கண்டால் நோய்நீங்கும். பாலஸ்திரீயையும், மனுடர்தசையைச் சுட்டுண்ணவுங் கண்டால் இலட்சுமீகரம் உண்டாகும். காலையருந்தக்கண்டாலும், புயத்தையருந்தக்கண்டாலும் திரவியலாபமுண்டாகும். தன் சிரசை அரிந்துண்ணக்கண்டால் இராசயோகமுண்டாகும். எ - று. (க௫)

அத்திபுளிகூதமுதற்றழைத்ததாரு
வதிலேறப்பான்மரங்களேறவட்டை
குத்திடுதேள்வெம்பாம்புதன்னைக்காணக்
குலமிகுத்துப்பலமேறுமெறும்புக்கூட்ட
மெத்திடவேயுடலாரச்சுகமாமெய்யில்
இடுமலத்தைக்காணவிருகரங்களாலு
முய்த்திடவேபூசவுண்ணக்கனவிற்காணி [தோ-
லொன்றினுக்கொன்றதிகபலமுரைப்பர்மா

(இ - ள்): அத்தி, புளி, மா முதலிய தழைத்த மரங்களிலேறவும், பாலுள்ள மரங்களிலேறவும் கண்டாலும், அட்டை, தேள், பாம்பு என்னும் இவைகளைக் கண்டாலும், வம்சவிருத்தியாய்ப் பலமேறும். எறும்புகள் சரீரத்திலேறக் கண்டால் சுகமாம். மலத்தைக்

கண்டாலும், அதனைக் கையினாலே மெய்யிற்பூசவும், உண்ணவுங் கண்டாலும் ஒன்றுக்கொன்று அதிகபலம் வரும். எ - று. (கஎ)

ஆனினிரைபுத்தகங்கள்காணக்கல்வி
யருமலையாலயமேறப்பசுக்களேழு
வினமறவோடிமுயற்சொருபமாகி
யேறிமதினின்றுவிழப்பிணிகடீரும்
பினமுறுமுலைவேசிதன்னைக்காணப்
பீதகமாந்துகிலுடுத்துப்பீதச்சாந்து
மேனிதனிலணிந்தவளைக்காணப்பேச
வீட்டகத்தினுட்புகுதமிகுமேசெல்வம்.

(இ - ள்): பசுநிரைகளையும், புத்தகங்களையும் கண்டால் கல்வி வரும். மலை, கோயில் என்பவைகளில் ஏறக் காணவும், எழுபசுக்களோடிவந்து முயல்வடிவாய் ஏறி மதிலிலிருந்து விழக்காணவும் பிணிதீரும். வேசியைக்காணப் பொன்னுண்டாம். பொற்பட்டுடுத்துப் பொற்சுண்ணமணிந்தவளைக் காணவும், பேசவும், அவள்வீட்டிற் புகவும் கண்டால் மிகுந்த செல்வமுண்டாகும். எ - று. (கஅ)

தினைகடுகுமிளகெள்ளுச்சாமையுள்ளி
செழுமுதிரைசேழ்வரகுதீயபிண்ணாக்
கினிமையுறுபலாக்கனிகொள்வரகோடெண்ணெ
யிவைகாணிற்பலபிணியுமெய்துமென்க
பணிகொள்சுரைக்காய்பாகல்பூசினிக்காய்
பன்றிமுயல்முதலைகடாப்படுவரீனர்
கனவதனிற்காணவிற்றுக்கங்கேடு
காவலராற்பயஞ்சேதங்காட்டுமாதோ.

(இ - ள்): தினை, கடுகு, மிளகு, எள்ளு, சாமை, உள்ளி, துவரை, குக்கன், பிண்ணாக்கு, பலாப்பழம், கொள்ளு, வரகு, எண்ணெய் இவைகளைக் கண்டாற் பல நோயும் வரும். சுரைக்காய், பாகற்காய், பூசினிக்காய், பன்றி, முயல், முதலை, எருமை, கள்விற்போர், ஈனர் என்னும் இவைகளைக் கண்டால் துக்கம், கேடு, அரசபயம் என்பன சேரும். எ - று. (க௯)

மரமுறிந்துவிழக்கயிற்றா லூரைச்சூழ
மன்னருக்கேகேடாகும்பன்றியாதி
மிருகமதுநலியமன்னர்பயமாமெச்சில்
விழைந்தருந்தமேனியினெய்தன்னைப்பூச
வருவருக்குமழுக்காடையுடுக்கச்சென்னி
யழகுறுகேசங்களையக்கழுதைமேதி
யுருவுயரொட்டகமேறிவிழக்காணி
லுறுமரணஞ்சிலநாளென்றுரைக்கலாமே.

(இ - ள்): மரம் முறிந்துவிழவும், கயிற்றினால் ஊரைச்சூழவும் கண்டால் அரசர்க்குக் கேடாகும். பன்றி முதலிய மிருகம் வருத்தக் கண்டால் அரசர் பயமாம். எச்சிலுண்ணவும், மேனியில் எண்ணெய் பூசவும், அழுக்காடையுடுக்கவும், மயிர்களையவும், கழுதை, எருமை, ஒட்டகம் என்பவைகளி லேறிவிழவும் கண்டாற் சிலநாளில் மரணமுண்டாகும். எ - று.

கைகாலற்றிடமுரியப்பற்கள்வீழக்
கந்தரமுமுடியுமறக்கண்டாற்பெண்டிர்
மெய்யுறுமித்திரர்கிளைஞர்சாவாஞ்சேற்றில்
வீழ்ந்தெழவாழ்புனனீந்தமதிவெய்யோனை
வையமதில்வீழ்த்தவிறையாலயத்தின்
மன்னுசிகரக்கொடிகள்வீழவேலை
வெய்தெனவேயூர்வளையக்கனவுகாணில்
வேந்தர்பயநகர்க்கேடுமேவுமன்றே

(இ - ள்): கைகால்முரியவும், பல்லுவிழவும், கழுத்தும் முடியும் அறவும் கண்டால், பெண்டிர், மித்திரர், கிளைஞர் சாவாகும். சேற்றிலே வீழ்ந்தெழவும், நீரிலே நீந்தவும், சூரியசந்திரர்களை விழுத்தவும், தேவாலயத்தின் சிகரக்கொடி விழவும், கடல் ஊரை வளைக்கவுங் கண்டால் இராசபயமும், நகர்க்கேடும் உண்டாம்.

சென்னியதுமுண்டிதமாய்க்காவியாடை
திகழவுடுத்தருந்தவத்தோன்சேரநீசன்
றன்னுமயிர்பிடித்தேகக்கழுதையோரி
சோகுகுறட்பூதமிராக்கதர்நாய்காக

மின்னுமெயிறுறுகரடிகுரங்குவேங்கை [த்
விறற்பருந்தோடசுரர்தமைத்தினமுங்காண
தன்னுயிரையுடனீக்கிவருடமொன்றிற்
சமன்றூதர்கொடுப்போவர்தயவிலாதே.

(இ - ள்): மொட்டந்தலையோடு காவியுடையுடுத்த சன்னியாசிவரவும், நீசன் தன்மயிரில் பிடித்துச் செல்லவும், கழுதை, நரி, பசாசு, பூதம், இராக்கதர், நாய், காகம், கரடி, குரங்கு, வேங்கை, பருந்து, அசுரர் இவைகளைத் தினமுங் கனாக்கண்டால் ஒருவருடத்தில் மரணம் உண்டாகும். எ - று. (௨௨)

செய்யகலையுடுத்துமெய்யிற்சிவந்தசாந்து
செம்மாலையணிந்திடமுட்காட்டிற்புற்றில்
வெய்யவுடற்குறையதனிலேறமாது
மிகுகுறட்கார்நிறத்தவளைக்கூடமேனி
துய்யகருநிறத்தொருவனிரும்பாற்செய்த
தூயகலன்பூண்டுகருந்துகிலும்வீக்கி
மெய்யதனிற்கருநிறப்பூச்சூடக்காண
மிகுநோய்வந்துடற்றூனும்வீயுமன்றே.

(இ - ள்): சிவப்புச்சீலையுடுத்துச் செஞ்சாந்தும் செம்பூமாலையும் அணியவும், முட்காட்டிலும் புற்றிலும் உடற்குறையிலும் ஏறவும், குறுத்த கருநிறம் பொருந்திய பெண்ணைக் கூடவும்; கருநிறமுடையவன் ஒருவன் இரும்பணி பூண்டு, கறுப்புச்சீலையுடுத்து, கரும்பூச்சூடவுங் கண்டால் நோய்வந்து மரணம் உண்டாகும். எ - று. (௨௩)

வானரத்திலேறிமுதற்றிசையிற்போக
மயிர்குறைக்கத்தலையதனிலெண்ணெய்வார்க்க
வினைமுறுசரத்தேறவிறந்தார்மேவி
லேறிடப்புல்விறகுசுமந்திடத்தென்றிக்கி
லூனமுறவொருவனைழைத்திடவேபோக
வொழியாதபிணியதனொடுமெலிந்துதிங்க
ளானவைக்குளிறந்திடுவனென்பர்தொன்மை
யாரணநூன்முழுதுணர்ந்தவறிவின்மிக்கோர்.

(இ - ள்): குரங்கிலேறிக் கிழக்கே போகவும் சௌரஞ்செய்துகொள்ளவும், தலையிலே எண்ணெய் வார்க்கவும், கழுதைமேலேறவும், பிணத்தின்மேலேறவும், புல்லும் விறகுஞ் சுமக்கவும், தெற்கேநின்று ஒருவனழைக்கவும், தெற்கே போகவும் கண்டால் நோயினால் மெலிந்து ஒருமாதத்துளிறப்பான். எ - று. ()

படுகுழியின்விழுந்துவழிகாணாதேதங்கப்
பாடிநடமாடியுச்சிவிரித்துத்தெற்கே
நடைபொருந்தப்பரிகழுதைவிக்குந்தேரி
னமன்றிசையிற்சென்றிடநன்னெற்றிவெண்டூ
ளிடநதிகள்கடல்கள்வற்றப்பாம்புக்கூட்ட [ல்
மிருந்திடக்கல்லாற்கறுத்தோனெறியக்கண்டா
விடவமுதங்கலந்தவிழிமின்னேபொன்னே
வெண்மதியொன்றளவதனில்வீவர்தாமே.

(இ - ள்): குழியில்விழுந்து வழியறியாது தடுமாறவும், பாடிக் கூத்தாடவும், தலைமயிரை விரித்துக் கொண்டு தெற்கே போகவும், குதிரையும் கழுதையும் பூட்டிய தேரிலேறித் தெற்கே போகவும், நெற்றியிற் சாம்பரணியவும், ஆறுகளும் கடலகளும் வற்றவும், பாம்புக்கூட்டமிருக்கவும், கரியவன் கல்லாலெறியவும் கண்டால் ஒருமாதத்துளிறப்பான். எ - று. (உ௫)

மலமதனைவாயதனால்வெள்ளிபொன்போல்
வாந்திக்கக்காடிகுரங்கிழுக்குந்தேரில்
நலமுறத்தெற்கேகவொருகறுப்பிதெற்கே
யங்கைபிடித்தீர்க்கவுடல்கறுப்பதாகக்
கலைகருமையாயுடுத்தேயிருக்கும்வேளைக்
கலையகலுநக்கன்முனாய்வந்துநிற்கக்
கொலையுறுவர்சிலநாளிற்பூமிவாழ்வு
கூடாதென்றமரர்குருக்கூறினானே.

(இ - ள்): தன்வாயால் வெள்ளியையும் பொன்னையும்போல மலத்தை வாந்திசெய்யவும், காடியுங் குரங்குமிழுக்குந் தேரிலேறித் தெற்கே போகவும்,

கரியநிறமுடையவள் தன்கையைப் பிடித்துத் தெற்கே யிழுத்துச்செல்லவும் தன்னுடம்பு கறுப்பாகவும், கருந்துகிலுடுத்திருக்குங் காலத்து நிருவாணி தன்முன் வந்துநிற்கவும் கண்டால் சிலநாட்களுட் கொல்லப்படுவான். எ - று. (உ௬)

வேறு

நீட்டுபாசராஞ்செங்கையிற்றந்திடல்
கோட்டெருமையுளியங்குரங்குநாய்
வாட்டமுற்றிட வந்துகறித்திட
வீட்டுதண்டிகைமேலேறலுந்துன்பமே.

(இ - ள்): எழுதியபாசாத்தைத் தானேற்கவும், எருமைக்கடாவும் கரடியும் குரங்கும் நாயும் தன்னைக் கடிக்கவும், தான் சிவிகைமேலேறவும் கண்டால் துன்பமடைவன். எ - று. (உஎ)

பெற்றம் வீழ்ந்திடப்பேசருப்பாதகன்
பற்றிவாள்கொடுபோகப்பகலிர
வுற்றவேளையிலிக்கனவுள்ளதேற்
சுற்றமோடுதப்மாவிறப்பமே.

(இ - ள்]: எருது விழவும், பாதகன் வாளோடு பிடித்துச்செல்லவும், பகலிலாயினும் இரவிலாயினும் கண்டால் சுற்றத்தோடு தானுமிறப்பான். எ - று. ()

பேகந்தூற்றிடவேண்டுசிற்றுண்டிகள்
பாகமாகப்புசிக்கப்பலன்பெறு
மாகமீதினணிசிலர்கைக்கொளத்
தோகையைப்பெணைத்தோய்ந்திடத்துன்பமே.

(இ - ள்:) மழைதூறவும், சிற்றுண்டிகளையுண்ணவும், தான் சரீரத்தணிந்திருந்த ஆபரணங்களை வேறுசிலர் கைக்கொள்ளவும், அமங்கலியைப் புணரவுங் கண்டால் துன்பம் வரும். எ - று. (உ௯)

தூரதேசங்கள்போனவர் தூலமா
யீரமேனியிருக்கிலிறப்பராஞ்
சீருடன் பணஞ்செய்திடக்காண்பரே
லூரினல்லவர்சாவென்றுரைப்பரே.

(இ - ள்): அரதேசம்போனவர் பருத்து கனேந்த சரீரத்தோடிருக்கக்கண்டால் அவர் இறப்பர்; விவாகஞ் செய்யக்கண்டால் ஊரிலுள்ள நல்லோரிறப்பர். எ-று.

சருப்பின்கட்டிதேங்காய்பு ருகின்சனி
விரும்புமாங்கனிவெண்ணெய்மஞ்சட்டிர
ளருப்பூவெழுத்தாணிநிறைகுடங்
குருப்பைதான்பெறிற்கூறுங்குழலியே.

(இ - ள்): வெல்லம், தேங்காய், எலுமிச்சம்பழம், மாம்பழம், வெண்ணெய், மஞ்சள், பூ, எழுத்தாணி, நிறைகுடம், குரும்பை என்னுமிவற்றைத் தான் பெறின் புத்திரப்பேறுண்டாம். எ - று. (௩௧)

கனவு பலன்றரும் காலம்

பன்னிரண்டாறுமூன்றுபகருமொன்
றரைமாதத்தான்
மூன்னுறுய்யாமமாதிமுறையினல்
வரும்யாமங்கண்
டன்னியவெழுநாளென்னவைகறைப்
பொழுதுதன்னிற்
பன்னியகனுக்கண்டார்க்குப்பலாபலன்
பலிக்குமன்றே.

(இ - ள்): முதற்சாமத்திற்கனு ஒரு வருடத்திலும், இரண்டாஞ்சாமத்திற்கனு ஆறுமாதத்திலும், மூன்றாஞ்சாமத்திற்கனு மூன்றுமாதத்திலும், நான்காஞ்சாமத்திற்கனு ஒன்றரைமாதத்திலும், விடியற்காலத்திற் கண்டகனு ஒருவாரத்திலும் பலனைக் கொடுக்கும். எ - று. (௩௨)

கனவின் றோஷநிவிர்த்தி

அரசுறுபூசைசெய்யவந்தணர்க்கமுதுநல்கக்
கருதியதானப்பண்ணக்கங்கைநீராதியாட
வரமுறுசுரபிதொட்டுவணங்கிடப்புராணங்கேட்கப்
புரையுறுகனுவிற்குற்றம்போமெனமொழிவான்றே.

(இ . ள்): தீக்கனுவின்குற்றம் பூசை, பிராமணபோசனம், தானம், தீர்த்தமாடல், பசுவணக்கம், புராணங்கேட்டல் என்பனவற்றால் தீரும். எ - று. ()

முற்றிற்று.

# புத்தக விளம்பரம்

## சோதிடப்புத்தகங்கள்

| | ரூ சத. |
|---|---|
| சோதிடவினாவிடை: 2-ம் பதிப்பு. சோதிடங் கற்போருக்கு ஏற்ற வசன நூல். ஜாதகங்கணிக்க உதாரணவிளக்கத்துடன் ராப்பர் பைண்டு, ... | 4- 00 |
| ஷெடி மார்பிள்பைண்டு ... | 5- 00 |
| ஜாதகபாஸ்கரன்: ஜாதகபலன்களை அறிய மிக உபயோகமானது ... ... | 4- 00 |
| ஸ்ரீபதி அனுபவஜாதகம் (மகாதெசாபுத்தி) | 2- 00 |
| பரகிதஸ்புடகணிதம்: விளக்கவுரை, உதாரணவிளக்கத்துடன் ... ... | 1- 50 |
| சேகராசசேகரமாலை உரையுடன் (முகூர்த்தநிர்ணய நூல்) ... ... | 1- 50 |
| சந்தானதீபிகைஉரை: புத்திரபாவபலனும், சுருக்கமான 12பாவபலனும் | 0- 75 |
| அரிஷ்டநவநீதம் (புதியபதிப்பு) ... | 0- 36 |
| ஜாதகசந்திரிகை விளக்கச்சுருக்கம் ... | 0- 25 |
| வருஷப்பெயர்விளக்கம்: (60 வருஷ இடைக்காடர் வெண்பாவுடன்) ... ... | 0- 15 |
| நவக்கிரக கவசம் ... ... ... | 0- 10 |
| சனிதுதி, சனிஸ்தோத்திரம் ... ... | 0- 10 |
| சரநூல் ... ... ... ... | 0- 10 |
| கனவுநூல் உரையுடன் ... ... | 0- 18 |
| Sripaty's Practical Horoscopy ... | 3- 00 |
| Sripaty's Interpretations on Jathaka Chandrika ... ... | 1- 25 |
| Summary of Interpretations on Jathaka Chandrika ... ... | 0- 25 |

சோதிடவிலாசபுத்தகசாலை, கொக்குவில்.
*(Ceylon.)*